**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.246/2022**

**Date : 18.02.2025**

**PW1 குமார் த/பெ. லோகநாதன்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் துறை அதிகாரம் எங்களுக்கு இல்லை. எனக்கு பிஸ்டல் மற்றும் ரிவால்வர் பாதுகாப்பு பணிக்காக கொடுக்கப்பட்டுள்ளது. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை வன உயிரியல் பாதுகாப்பு சட்டத்தின்படி பதிவு செய்துள்ளேன். 1மற்றும் 2வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மான் சுடப்பட்ட இடம் பெரிய ஏரி அந்த இடம் வனகாப்புகாடு பகுதி என்றால் இல்லை, அது அரும்பாவூர் கிராமத்திற்கு உட்பட்டது. 1 மற்றும் 2வது எதிரிகளின் கைரேகை பதிவுகளை எடுத்தேன். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களான துப்பாக்கி, அருவாள் ஆகியவற்றை பதிந்துள்ள கைரேகைகளை நான் மாதிரி எடுக்கவில்லை.

1 மற்றும் 2 எதிரிகளின் ரிமாண்ட் ரிப்போர்டில் கைது செய்த நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ரிப்போர்ட்டை நான்தான் தயார் செய்தேன். ரைடு செல்லும்போது ரைடு செல்வதுகுறித்து நாட்குறிப்பில் பதிவு செய்வதுண்டா என்றால் நாட்குறிப்பு இல்லை, வார டைரி உள்ளது, ரைடு செல்வது குறித்து பதிவு செய்வதில்லை. இறந்துபோன மானின் உடலில் குண்டு இருந்ததா என்றால் பார்க்கவில்லை, இரண்டு குண்டடிபட்ட காயங்கள் இருந்தது. ரைடு செல்வது குறித்து அரும்பாவூர் காவல் நிலைய ஆய்வாளர் கலா, உதவி

ஆய்வாளர் சிலம்பரசன் ஆகியோர்களுக்கு நான் எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுக்கவில்லை, வாய்மொழியாக சொன்னேன்.

ஆய்வாளர் கலா மற்றும் உதவி ஆய்வாளர் சிலம்பரசன் ஆகியோர்கள் ரைடுக்கு எங்களுடன் வரும்போது அவர்களுடைய காவல் நிலைய பொதுநாட்குறிப்பேட்டில் பதிவு செய்துவிட்டு வந்தார்களா என்றால் அவர்களுக்குதான் தெரியும். எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்ட்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. நான் விடுமுறையில் சென்றுவிட்டேன். எங்களுக்கு பணிக்காக ஜீப் வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் இருசக்கர வாகனத்தில் ரைடுக்கு சென்றோம். என்னுடைய வாகனத்தில் குணசேகரனும், குமார் வண்டியில் பாலசுப்பிரமணியனும் சென்றோம்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி இயங்கும்நிலையில் இருந்ததா என்பதை கண்டறிய துப்பாக்கி நிபுணருக்கு அனுப்பவில்லை. சம்பவ இடத்தில் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கு சொத்துக்களை கைப்பற்றி வன அலுவலகத்திற்கு வந்து WLOR வழக்கு தயார் செய்தோம். சம்பவ இடத்தில் ஒரு மணி நேரத்தில் ஒப்புதல் வாக்குமூலங்களை மற்றும் இதர ஆவணங்களை தயார் செய்தோம். எங்களுக்கு கொடுக்கப்பட்ட டார்ச் லைட் வெளிச்சத்தில் ஆவணங்களை தயார் செய்தோம். நான்கு பேரும் டார்ச் லைட் எடுத்துசென்றோம். டார்ச் லைட்டுக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எதிரிகளை கைது செய்த பிறகு நீதிமன்றத்தில் பிரிவு 55 வன உயிரியல் பாதுகாப்பு சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. இறந்துபோன மானின் கொம்புக்கும், வலது கண்ணுக்கும்இடையே இரத்த காயம் இருந்தது. வெட்டுக்காயம் இருந்ததா என்றால் இல்லை. எதிரிகளுக்கும், இந்த குற்ற செயலுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், 1 மற்றும் 2 எதிரிகளை மிரட்டி

ஒப்புதல் வாக்குமூலம் பெற்ப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வேறு யாரோ செய்த செயலுக்கு எதிரிகளை கட்டாயப்படுத்தி வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.